OS.No.57/18

நாள்- 16.03.2020.

வா.சா.3 லதா

குறுக்குவிசாரணை

2ம் வாதி சிவபாக்கியம் எனது தாயார் ஆவார். 1ம் பிரதிவாதி பிச்சை எனது மாமா. 2ம் பிரதிவாதி அவருடைய மனைவி ஆவார். 1ம் வாதி பூஜமணி , 1ம் பிரதிவாதியின் மகள் ஆவார். இடம் பாகம் கேட்டுதான், இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி பிச்சைக்கு சொந்தமான இடத்தை பாகம் கேட்டுதான், நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எனது தாயார் சிவபாக்கியம் வாதியாக இருந்து, தாக்கல் செய்திருந்த வழக்கில், நானும், 3ம் வாதியும் மற்றும் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதியான கலைமகள் சபா ஆகியோர் பிரதிவாதிகளாக இருந்தோம். எனது தாயாருக்கு தெரியாமல், சொத்தை விற்றுவிட்டதாக கூறி எனது தாயார் அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து எங்களுக்கு பூர்வீக சொத்து என்று காட்டும் வகையில், நாங்கள் ஆவணம் தாக்கல் செய்துள்ளோம். 1986ம் வருடம் எனக்கு திருமணம் ஆனது. வழக்கு சொத்து, எங்களுடைய பூர்வீக சொத்து அல்ல என்று சொன்னாலும்,அது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று சொன்னாலும், அதனால் வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி அவருடைய இஷ்டபடி விற்பனை செய்ய அவருக்கு உரிமை உள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. எனது தாயார் சிவபாக்கியத்திற்கு வழக்கு சொத்தில் ஒரு பாகம் இருந்தது என்று பஞ்சாயத்தர்கள் கூறியதாக சொல்லும்போது, அந்த பஞ்சாயத்தார்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது தாயாருக்குதான் தெரியும். வழக்கு சொத்து மழையை நம்பி மட்டுமே விவசாயம் செய்யக்கூடிய வானம் பார்த்த பூமி ஆகும். வழக்கு சொத்தில், நாங்கள் தான் அனுபவத்தில் இருந்து வருவதை காட்டும் வகையில், ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு அனுபவத்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் சிவபாக்கியத்திற்கு வழக்கு சொத்தில் பாகம் எதுவும் இல்லாததால், பஞ்சாயத்தார் முன்னிலையில்

நான் சொல்வது போல் , எந்த ஒரு நிகழ்வும் நடந்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாளது தேதிவரை 3ம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு சொத்து எந்த வருடம் விற்பனை செய்யப்பட்டது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்ற சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, அவருக்கு சுயமாக பாத்தியப்பட்டசொத்தை தான் கிரயம் செய்துள்ளார் என்ற சொன்னாலும், அந்த சொத்தில் எங்களுக்கு பாகம் எதுவும் கிடைக்ககூடியது அல்ல என்ற சொன்னாலும், அதனால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய கூட்டு குடும்ப சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல.